முருகப்பெருமான் துணை

**மகான் திருபாண் ஆழ்வார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

19.06.2021, சனிக்கிழமை

1. தவபலம் கொண்ட ஞானியே
தருமபலம் கொண்ட தவசியே
புவனம் காக்கப்பட வேண்டி
புண்ணிய வழிகாட்டும் அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அருளுவேன் யோகபிரசன்ன ஆசி
வரங்களென பிலவ மிதுனதிங்கள்
வழங்குவேன் பஞ்சதிகதி காரிவாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 5ம் நாள், 19.06.2021, சனிக்கிழமை)
3. வாரமதில் திருபாண்ஆழ்வார் யானும்
வையகம் வளமுற உரைப்பேன்
சோரமான மக்கள் படையை
சுத்தநெறி கொண்டு அரங்கனும்
4. அரங்கனும் ஞான படைகளாக்கி
அகிலம் பாதுகாப்பு பெற
வரங்களாக அருளி வர
வணங்கி ஞானிகள் பூசையை
5. பூசையை உலகமக்கள் செய்து
புகலுவேன் தருமம் கடைபிடிக்க
ஆசைவழி எல்லா மாயைகளும்
அழிவில்லா அகன்றோடி மாற்றம்
6. மாற்றம் அரங்கனால் காணும்
மக்களின் கஷ்டம் போக்கி
ஆற்றல்தரும் அரங்கன் ஆசி
அருள் தீட்சை ஆக்கம் தரும்
7. ஆக்கமுடன் பிரணவக்குடிலின்
அனைத்து விழாக்களிலும்
தேக்கமின்றி கலந்து வந்து
தொண்டர்களாக இணைய
8. இணையவே ஞான பலமும்
இணையிலா வண்ணம் கூடி
துணையாக அரங்கன் ஆறுமுகன்
திருவருள் கூடி வருக
9. வருகவே வளர்ச்சி காணும்
வந்தடையும் சமூக மாற்றம்
முருகப் பெருமான்வழிபாடு செய்து
முழுமைபட அன்னதான சேவை

10. சேவைவழி அனைவரும் கலந்து
செப்பிடுவேன் மேன்மை கண்டிட
அவனியோ ஞான ஆட்சியை
அரங்கன் தயவால் அடையும்

11. அடையவே உலக மக்களே
ஆபத்தில்லா வாழ்வை காண
தடையின்றி அரங்கன் வழிவாரீர்
தாமுரைத்த யோகபிரசன்ன ஆசிமுற்றே

–சுபம்–